THE NEW INDIAN EXPRESS

# JIPMER convocations to be held on Oct 28, 29

Puducherry: The 13th convocation for PhD, DM/MCh, PDF/PDCC, MD/MS/MDS, and MBBS students of JIPMER will be conducted on October 28 and the 11th convocation for nursing and allied health sciences students will be held on October 29, at Dr APJ Abdul Kalam Auditorium in the campus, awaarding degrees to 802 students. Ramon Magsaysay Awardee and oncologist Dr R Ravi Kannan and R Rajagopal, director of Trivandrum Institute of Palliative Sciences will be chief guests for the convocations.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
27.10.2023 (வெள்ளிக்கிழமை)

# ஜிப்மரில் பட்டமளிப்பு விழா

## 2 நாட்கள் நடக்கிறது

புதுச்சேரி, அக்.27-

புதுச்சேரி கோரிமேட்டில் ஜவகர்லால்நேரு மருத்துவ முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (ஜிப்மர்) உள்ளது. இங்கு பட்டமளிப்பு விழா நாளை (சனிக்கிழமை), நாளை மறுநாள் (ஞாயிற்றுக் கிழமை) என 2 நாட்கள் நடக்கிறது. முதல் நாளில் பி.எச்டி., டி.எம்., எம்.சிஎச், பி.டி.எப்., பி.டி.சி.சி., எம்.டி., எம்.எஸ்., எம்.பி.பி.எஸ் படித்த 442 மாணவ-மாணவிகளுக்கு 13-வது பட்டமளிப்பு விழா நாளை (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு அப்துல் கலாம் கலையரங்கில் நடக்கிறது. விழாவில் அசாம் சில்சார் கச்சார் புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் ரவிகண்ணன் கலந்துகொண்டு பட்டங்கள் வழங்குகிறார்.

விழாவில் 2-வது நாள் காலை 10 மணிக்கு எம்.எஸ்சி. நர்சிங், எம்.எஸ்சி. அலைடு ஹெல்த் சயின்ஸ், எம்.பி.எச்., பி.ஜி.டி., பி.பி.டி.என்., பி.எஸ்சி. நர்சிங், பி.எஸ்சி. அலைடு ஹெல்த் சயின்ஸ் முடித்த 360 பேருக்கு 11-வது பட்டமளிப்பு விழா நடக்கிறது. திருவனந்தபுரம் நோய் தணிப்பு ஆதரவு சிகிச்சை அறிவியல் நிறுவன இயக்குனர் ராஜகோபால் கலந்துகொண்டு பட்டங்களை வழங்குகிறார்.

விழாவில் பாடவாரியாக அதிக மதிப்பெண் பெற்று கல்வியில் சிறந்து விளங்கும் 110 மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இந்த பட்டமளிப்பு விழாவுக்கு ஜிப்மர் தலைவர் விஷ்வ மோகன் கடோச் தலைமை தாங்குகிறார். ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் மற்றும் பலர் விழாவில் கலந்துகொள்கின்றனர்.

தினமலர்

# ஜிப்மரில் பட்டமளிப்பு விழா நாளை துவக்கம்

புதுச்சேரி,அக்.27–

ஜிப்மரில் மருத்துவ படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா 28, 29 ஆகிய தேதிகளில் நடக்கிறது.

ஜிப்மர் மருத்துவ கல்லூரியில், மருத்துவ படிப்பிற்கான 13வது பட்டமளிப்பு விழா நாளை (28ம் தேதி) காலை 10 மணிக்கு அப்துல் கலாம் கலையரங்கில் நடக்கிறது.எம்.பி.பி.எஸ்., எம்.டி., எம்.டி.எஸ்., பி.எச்.டி., பி.டி.எப்., பி.டி.சி.சி., டி.எம்., உள்ளிட்ட படிப்புகளை முடித்த 442 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்படுகிறது. எம்.பி.பி.எஸ்., மாணவர்கள் 186 பேர் பட்டம் பெறுகின்றனர்.

கேச்சர் புற்றுநோய் மருத்துவமனை ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் ரவிகண்ணன் சிறப்புரையாற்றி, பதக்கங்களை வழங்க உள்ளார்.

இதேபோல் செலிலியர் மற்றும் துணை மருத்துவ படிப்புகளுக்கான 11வது பட்டமளிப்பு விழா 29ம் தேதி காலை 10 மணிக்கு நடக்கிறது. இதில் எம்.எஸ்.சி., நர்சிங், அலைடு ஹெல்த் சயின்ஸ், எம்.பி.எச்., பி.ஜி.டி., பி,எஸ்.சி., நர்சிங் முடித்த 360 மாணவர்கள் பட்டம் பெற உள்ளனர்.எமெரிடஸ் நிறுவன இயக்குநர் ராஜகோபால், ஜிப்மர் தலைவர் விஷ்ப மோகன் கடோச், இயக்குநர் ராகேஷ் அகர்வால் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். இரண்டு பட்டமளிப்பு விழாவிலும் 802 மாணவர் பட்டம் பெற உள்ளனர்.மேலும் அதிக மதிப்பெண் பெற்ற 110 மாணவர்களுக்கு பதக்கம், பரிசுகள் வழங்கப்பட உள்ளது. ஜிப்மர் கல்வி மையத்தில், மாணவர்களின் பெற்றோர், குடும்பத்தினர் பட்டமளிப்பு விழாவை காண நேரடியாக ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.ஆன்லைனிலும் ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது.

இத்தகவலை ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் தெரிவித்துள்ளார்.

தினகரன்
அக்டோபர் 27, 2023 வெள்ளிக்கிழமை

# ஜிப்மரில் பட்டமளிப்பு விழா

## 28, 29ம் தேதிகளில் நடக்கிறது

புதுச்சேரி, அக். 27: புதுச்சேரி ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஜிப்மரில் பி.எச்.டி., டி.எம்., எம்.சி.எச்., பி.டி.எப்., பி.டி.சி.சி., எம்.டி., எம்.எஸ்., எம்.டி.எஸ்., எம்.பி.பி.எஸ் மாணவர்களுக்கான 13வது பட்டமளிப்பு வரும் 28ம் தேதியும் (நாளை), எம்.எஸ்.சி நர்சிங், எம்.எஸ்.சி. அலைடு ஹெல்த் சயின்ஸ், பி.எஸ்.சி. நர்சிங், பி.எஸ்.சி. அலைடு ஹெல்த் சயின்ஸ் மாணவர்களுக்கான 11வது பட்டமளிப்பு விழா வரும் 29ம் தேதியும் (நாளை மறுநாள்) ஜிப்மர் அப்துல் கலாம் கலையரங்கில் நடக்கிறது.

மருத்துவ படிப்புக்கான 13வது பட்டமளிப்பு விழாவில் புற்றுநோய் மருத்துவமனையின் இயக்குநர் ரவி கண்ணன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு பட்டமளிப்பு உரையாற்றுகிறார். செவிலியர் மற்றும் துணை மருத்துவ படிப்புகளுக்கான 11வது பட்டமளிப்பு விழாவில் எமெரிடஸ் பேலியம் இந்திய நிறுவன தலைவரும், திருவனந்தபுரம் நோய் தணிப்பு ஆதரவு சிகிச்சை நிறுவனத்தின் இயக்குநர் ராஜகோபால் தலைமை விருந்தினராக பங்கேற்று பட்டமளிப்பு உரையாற்றுகிறார். ஜிப்மர் தலைவர் விஷ்வ மோகன் கடோச் தலைமை தாங்குகிறார்.



மருத்துவ படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழாவில் 442 மாணவர்கள், செவிலியர் மற்றும் துணை மருத்துவ படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழாவில் 360 மாணவர்கள் என மொத்தம் 802 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்படுகிறது. அந்தந்த பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று கல்வியில் சிறந்து விளங்கும் 110 மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.